# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.185/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | சித்ரா (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 18.11.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டியில் குடியிருந்து காய்கறிவியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். **(**சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்.**)**

எனது தெருவில் பஞ்சாயத்து சார்பில் குடிநீர்குழாய் அமைத்துள்ளார்கள். எனது தெருவில் ஆஜர் எதிரியும் வசித்து வருகிறார். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே ஏற்கனவே நிலம் தொடர்பாக பிரச்சனை இருந்து வருகிறது. 13.03.2025ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் நான் பஞ்சாயத்து பைப்பில் தண்ணீர் பிடிக்க சென்றேன். அங்கு ஆஜர்எதிரி இருந்தார்.

நான் தண்ணீர் பிடித்து கொண்டிருக்கும்போது ஆஜர் எதிரி நான் தண்ணீர் பிடிக்ககூடாது என்று சொல்லி பைப்பை மூடினார். நான் ஏன் தண்ணீர் பிடிக்ககூடாது என்று கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி நீர் தண்ணீர் பிடிக்ககூடாது என்று கூறி குடத்தால் என் தலையில் இடித்தார். பின்னர் கல்லால் எனது தலையில் குத்தினார். எனக்கு தலையில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது. நான் உடனே எனது கணவர் சாட்சி - 2

வைரனுக்கு தகவல் சொன்னேன்.

அவர் வந்து என்னை எருமப்பட்டி காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார். போலிசார் என்னை முதலில் மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார்கள். நானும் எனது கணவரும் எருமப்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பின்னர் மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(**புகார் வாக்குமூலம் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில்தான் பஞ்சாயத்து பைப் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்து பைப் அமைக்கப்பட்ட இடமானது கலைச்செல்வன் என்பவர் வீட்டுக்கு முன்புதான் என்றால் சரியல்ல எனது கணவர் வைரன் மற்றும் எனக்கும் பாத்தியப்பட்ட நிலத்திற்கு முன்பாக உள்ள பஞ்சாயத்து நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கலைச்செல்வனும் எதிரியும்தான் மனு கொடுத்து மனுவின் பேரில் பைப்பினை அமைப்பதை நான் தடுத்தேன் என்றால் சரியல்ல. நாமக்கல் மருத்துவமனையில் நான் எத்தனை மணிக்கு சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் சம்பவத்தன்று மாலை 05.00 – 05.30 மணிக்கு சேர்ந்தேன். போலிசார் என்னிடம் எப்போது புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சம்பவம் நடந்த அடுத்த நாள் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருவதால் பஞ்சாயத்து பைப்பை நான் அமைக்கவிடாமல் தடுத்தேன் என்றும் அதில் இருந்து நான் தப்பிக்கும் வன்னம் எதிரிமீது இந்த புகாரினை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**